# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 55/மா/2024
நாள். 25.02.2025

திரு. க.சுரேஷ் பாபு
சென்னை ............... முறையீட்டு மனுதாரர்

1) ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி
2) உரிமையாளர்
ஜமால் பேலஸ் திருமண மண்டபம்,
பம்மல், சென்னை ................ எதிர்மனுதாரர்கள்

சென்னை–44, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, எண்.13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.க.சுரேஷ் பாபு என்பவரது 09.02.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.02.2024 அன்று பெறப்பட்டு, 55/மா/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–44, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, எண்.13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.க.சுரேஷ் பாபு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"தந்தை பெரியார் நகரில் கதவு எண்.19, பழனியப்பன் தெரு, புல எண்.100/52 மனை எண்.21, விஸ்தீரணம் 2688 சதுர அடி கொண்ட மனைக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், உறுப்பினர் செயலர் கடித எண்.143/2016 நாள் 30.08.2016 மற்றும் ஆணையாளர், பம்மல் நகராட்சி கடித எண்.ப.மு.143/2016–இன் கீழும், குடோனுக்கான கட்டிட அனுமதி எண்.140/2016/F1–க்கு ஆணையாளர், பம்மல் நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. மாறாக விதிகளை மீறி, குடோன் கட்டிடம் கட்டுவதற்கு பதிலாக, ஜமால் பேலஸ் திருமண மண்டமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. திருமண மண்டபம் அமைக்க வேண்டுமெனில், நிலத்தின் உரிமையாளர், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 (Tamil Nadu District Municipalities Act, 1920), பல மாடி கட்டிடம் மற்றும் பொது கட்டிட விதிகள் 1973 (Multi-Storeyed and Public Building Rules, 1973) மற்றும் தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிமம்) சட்டம் 1965 (Tamil Nadu Public Buildings (License) Act, 1965)–இன் கீழ் அனுமதி பெற வேண்டும் என விதிகள் உள்ள நிலையில், மாறாக, பொது கட்டிடத்தில் (திருமண மண்டபம்)

விதிகளின்படி வசதிகள் செய்யப்பட வேண்டும், வாகனங்கள் நிறுத்த இடம் இருக்க வேண்டும். மேலும் தீயணைப்புத் துறை மற்றும் காவல் துறையிடம் அனுமதி பெற வேண்டும் என விதிகள் உள்ள நிலையில், மேற்கண்ட திருமண மண்டப கட்டிடத்தில் எவ்வித அடிப்படை வசதிகள் மேற்கொள்ளாமலும், உரிய உரிமங்கள் பெறப்படாமலும் கட்டப்பட்டுள்ளது. மேலும், இதில் நடைபெறும் விழாக்களில் வருபவர்களின் வாகனங்கள் நிறுத்தம் இடம் இல்லாததால் இங்கு வசிப்பவர்களின் வீட்டின் முன்பு நிறுத்தப்படுவதால் வாகன ஓட்டிகளுக்கும் பகுதிவாசிகளுக்கும் இடையே தேவையற்ற விவாதங்கள் ஏற்பட்டு அது கைகலப்பு நிலைக்கு வந்து விடுகிறது. இதற்கு மேல் மதுப்பிரியர்களின் செயல்களால் சுற்றியுள்ள குடியிருப்புவாசிகளுக்கும், பொது மக்களுக்கும் மற்றும் பொது போக்குவரத்திற்கும் பெரிதும் இடையூறாக பாதுகாப்பற்ற நிலையில், மேற்காணும் சட்ட விதிகளுக்கு மாறாக செயல்படும் திருமண மண்டபத்தை, ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் அடிப்படையிலும், தடை செய்ய வேண்டியும், இது தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்''.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.07.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி ஆணையர் தனது 20.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"திரு.க.சுரேஷ்பாபு என்பவர், 20.10.2023, 19.12.2023, 01.03.2024 மற்றும் 06.03.2024 நாளிட்ட மனுக்களில் தகவல் அறியும் சட்டம் 2005–ன் கீழ் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், திரு.க.சுரேஷ் பாபு என்பவர் புகார் தெரிவித்துள்ள மனை எண்.21, தந்தை பெரியார் நகர், பழனியப்பன் தெருவில் உள்ள கட்டடத்திற்கு வணிக பயன்பாடு (Godown) கட்ட அனுமதி பெறப்பட்டு, தற்போது திருமண மண்டபமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட உபயோக மாற்ற கட்டடத்திற்கு, 1998–ம் வருட நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135/1 பிரிவின் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 23.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னை குரோம்பேட்டை தந்தை பெரியார் நகரில் கதவு எண்.19, பழனியப்பன் தெரு, புல எண்.100/52, மனை எண்.21, விஸ்தீரணம் 2688 சதுர அடி கொண்ட மனைக்கு குடோன் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், மாறாக விதிகளை மீறி Jamal Palace என்ற திருமண மண்டபமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இத்திருமண மண்டபத்தில் நடைபெறும் விழாக்களில் வருபவர்களின் வாகனங்கள் இங்கு வசிப்பவர்களின் வீட்டின் முன்பு நிறுத்தப்படுவதால் வாகன ஓட்டிகளுக்கும் இப்பகுதிவாசிகளுக்கும் இடையே தேவையற்ற விவாதங்கள் ஏற்பட்டு அது கைகலப்பு நிலைக்கு வந்து விடுகிறது. இதற்கு மேல் மதுப்பிரியர்களின் செயல்கள் பொது மக்களுக்கும், பொது போக்குவரத்துக்கும் பெரிதும் இடையூறாகவும் உள்ளது. எனவே, சட்டவிதிகளுக்கு மாறாக செயல்படும்

திருமண மண்டபத்தை தடை செய்ய வேண்டி இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்."

6. எதிர்மனுதாரர்களில், தாம்பரம் மாநகராட்சி, பம்மல் பழனியப்பன் தெருவில் இயங்கும் ஜமால் மினி பேலஸின் உரிமையாளர் திரு. எஸ்.எம்.பி.முகம்மது அபுபக்கர் சித்திக் என்பவரின் சார்பாக திரு. எஸ்.மாரிசங்கர் என்பவர் 23.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மேற்கண்ட முகவரியில் இயங்கும் ஜமால் மினி பேலஸை திருவாளர்கள் எம்.ஜே.ஷமீம் முகம்மது ஹிதயதுல்லா மற்றும் அப்தல் ரசாக் ஆகியோரிடமிருந்து 02.02.2023 அன்று பத்திர பதிவு மூலம் திரு. எஸ்.எம்.பி.முகம்மது அபுபக்கர் சித்திக் அவர்கள் வாங்கினார். இந்த மினி பேலஸ்க்கான உரிமங்கள் யாவும் முந்தைய உரிமையாளரால் பம்மல் நகராட்சி அலுவலகத்தில் பெறப்பட்டது.

மேற்கண்ட கட்டிடம் குடோன் கட்டுவதற்காக அனுமதி பெறப்பட்ட விவரம் அவருக்கு தெரியாது. இருப்பினும் தற்போது ஜமால் மினி பேலசிற்கு தரைதளத்தில் வாகனம் நிறுத்த வசதி உள்ளது. மேலும் எதிரே 1–1/4 கிரவுண்டில் வாகன நிறுத்த வசதி உள்ளது. தீயணைப்பு துறைக்கு உரிய அனுமதி வேண்டி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது உள்ள சட்ட விதிகளின்படி இந்த மினி பேலஸ்சின் மாற்று அங்கீகாரம் சம்பந்தமாக ரெகுலேஷன் அனுமதி இருப்பின் அதனை உரிய அதிகாரிகளிடம் மனு அளித்து அனுமதி பெற காலஅவகாசம் தருமாறு இம்முறைமன்ற நடுவத்தை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்."

7. தாம்பரம் மாநகராட்சியின் முதுநிலை நகர அமைப்பு அலுவலர் 23.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

| வ. எண். | கேள்வி | பதில் |
|---|---|---|
| 1. | மனை எண்.21, தந்தை பெரியார் நகர், பழனியப்பன் தெருவில் உள்ள குடோன் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டு மாறாக (Jamal Palace) திருமண மண்டபமாக மாற்றி அமைத்துள்ளார். இது நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 205 (1) மற்றும் 205 (2)–க்கு எதிரானது என தெரிவித்துள்ளார். | ஜமால் பேலஸ் உரிமையாளருக்கு 1998–ம் வருடத்திய நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135/1 பிரிவின் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் மனுதாரருக்கு 25.01.2024 ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் தகவல் அனுப்பப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2. | திருமண மண்டபம் அமைக்க வேண்டுமெனில், நிலத்தின் உரிமையாளர் (Tamil Nadu District Municipalities Act 1920) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, Multi Storeyed and Public Building Rules 1973, பல மாடி கட்டிடம் மற்றும் பொது கட்டிட விதிகள் 1973, மற்றும் Tamil Nadu Public Building (License) Act 1965, தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிமம்) சட்டம் 1965இன் கீழ் அனுமதி பெற வேண்டும் என தெரிவித்துள்ளார். | மேலும் ஜமால் பேலஸ் உரிமையாளர் Stilt Floor, முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் குடோன் கட்டிடத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதால், (Tamil Nadu District Municipalities Act 1920). Multi Storeyed and Public Building Rules 1973, பல மாடி கட்டிடம் மற்றும் பொது கட்டிட விதிகள் 1973 பொருந்தாது. தற்போது நடைமுறையில் Tamil Nadu Urban Bodies Act 1998 (Amended by Act 35 of 2022) மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. |
| 3. | பொது கட்டிடத்தில் (திருமண மண்டபம்) விதிகளின்படி வசதிகள் செய்யப்பட வேண்டும். அதைப்போல போதுமான வாகனங்கள் நிறுத்தும் இடம் இருக்க வேண்டும். மேலும் தீயணைப்புத் துறை மற்றும் காவல்துறையிடம் அனுமதி பெற வேண்டும். | மனுதாரர் குடோன் உபயோகத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதால் தீயணைப்புத் துறை மற்றும் காவல்துறையிடம் அனுமதி பெற வேண்டியது அச்சமயத்தில் ஏற்படவில்லை. அனுமதிக்கு மாறாக கட்டிடத்தை மாற்றி உபயோகிப்பதற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்பு நாள் 21.01.2025 மற்றும் 1998–ம் வருடத்திய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135/4 மற்றும் 6 பிரிவின் கீழ் அறிவிப்பு நாள் 21.01.2025–ல் அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

8. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களான தாம்பரம் மாநகராட்சி, பம்மல் பழனியப்பன் தெருவில் இயங்கும் ஜமால் மினி பேலஸ்சின் உரிமையாளரின் சார்பாக ஆஜரான திரு. எஸ்.மாரிசங்கர் என்பவரது வாக்குமூலம் மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, முதுநிலை நகர அமைப்பு அலுவலரின் வாக்குமூலம் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை குரோம்பேட்டை தந்தை பெரியார் நகரில் கதவு எண்.19, பழனியப்பன் தெரு, புல எண்.100/52, மனை எண்.21, விஸ்தீரணம் 2688 சதுர அடி கொண்ட மனைக்கு குடோனுக்காக பம்மல் நகராட்சி ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்ட கட்டிடம், அனுமதிக்கு மாறாகவும், வாகனங்கள் நிறுத்த இடம் இல்லாமலும், தீயணைப்புத் துறை மற்றும் காவல் துறையிடம் அனுமதி பெறாமலும் Jamal Palace என்ற திருமண மண்டபமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதனால், மேற்கண்ட திருமண மண்டபத்தில்

நடைபெறும் விழாக்களுக்கு வருபவர்களின் வாகனங்கள் இங்கு வசிப்பவர்களின் வீட்டின் முன்பு நிறுத்தப்படுவதால், இப்பகுதிவாசிகளுக்கும் இடையே தேவையற்ற விவாதங்கள் ஏற்படுகிறது எனவும், சட்டவிதிகளுக்கு மாறாக செயல்படும் இத்திருமண மண்டபத்தை தடை செய்ய வேண்டியும், இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி, பம்மல் பழனியப்பன் தெருவில் இயங்கும் ஜமால் மினி பேலஸை திருவாளர்கள் எம்.ஜே.ஷமீம் முகம்மது ஹிதயதுல்லா மற்றும் அப்தல் ரசாக் ஆகியோரிடமிருந்து 02.02.2023 அன்று பத்திர பதிவு மூலம் திரு. எஸ்.எம்.பி.முகம்மது அபுபக்கர் சித்திக் அவர்கள் வாங்கினார் என்பதும், இந்த மினி பேலஸ்க்கான உரிமங்கள் யாவும் முந்தைய உரிமையாளரால் பம்மல் நகராட்சி அலுவலகத்தில் பெறப்பட்டது எனவும், மேற்கண்ட கட்டிடம் குடோன் கட்டுவதற்காக அனுமதி பெறப்பட்ட விவரம் அவருக்கு தெரியாது என்பதும், தற்போது ஜமால் மினி பேலசிற்கு தரைதளத்தில் வாகனம் நிறுத்த வசதி உள்ளது என்றும், எதிரே 1–1/4 கிரவுண்டில் வாகன நிறுத்த வசதி உள்ளது என்றும், தீயணைப்பு துறைக்கு உரிய அனுமதி வேண்டி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது உள்ள சட்ட விதிகளின்படி இந்த மினி பேலஸ்சின் மாற்று அங்கீகாரம் சம்பந்தமாக ரெகுலேஷன் அனுமதி இருப்பின் அதனை உரிய அதிகாரிகளிடம் மனு அளித்து அனுமதி பெற காலஅவகாசம் தருமாறு, எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

மனை எண்.21, தந்தை பெரியார் நகர், பழனியப்பன் தெருவில் உள்ள குடோன் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டு மாறாக (Jamal Palace) திருமண மண்டபமாக மாற்றி அமைத்துள்ளார் என்பதும், ஜமால் பேலஸ் உரிமையாளருக்கு 1998–ம் வருடத்திய நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135/1 பிரிவின் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது எனவும், மேலும் ஜமால் பேலஸ் உரிமையாளர் Stilt Floor, முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் குடோன் கட்டிடத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதால், (Tamil Nadu District Municipalities Act 1920) Multi Storeyed and Public Building Rules 1973, பல மாடி கட்டிடம் மற்றும் பொது கட்டிட விதிகள் 1973 பொருந்தாது என்பதும், தற்போது நடைமுறையில் Tamil Nadu Urban Bodies Act 1998 (Amended by Act 35 of 2022) மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனவும் மற்றும் மனுதாரர் குடோன் உபயோகத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதால் தீயணைப்புத் துறை மற்றும் காவல்துறையிடம் அனுமதி பெற வேண்டியது அச்சமயத்தில் ஏற்படவில்லை என்பதும், அனுமதிக்கு மாறாக கட்டிடத்தை மாற்றி உபயோகிப்பதற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்பு நாள் 21.01.2025 மற்றும் 1998–ம் வருடத்திய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135/4 மற்றும் 6 பிரிவின் கீழ் அறிவிப்பு நாள் 21.01.2025–ல் அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் முதுநிலை நகர அமைப்பு அலுவலரின் வாக்குமூலம் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், புகாரில் குறிப்பிடப்பட்டிருக்கும் தற்போது ஜமால் பேலஸ் என்ற பெயரில் திருமண மண்டபமாக இயங்கி வரும் குடோனுக்கு 2016–ம் ஆண்டு பம்மல் நகராட்சியால் குடோனுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தாம்பரம் மாநகராட்சியான பின்னரும், இத்தனை வருடங்களாக முறையான அனுமதியின்றி திருமண மண்டபம் இயங்கி வருவது வருந்தற்குரிய

விடயமாக இம்முறைமன்றம் கருதுகிறது. இந்நிகழ்வில் தொடர் நடவடிக்கை மாநகராட்சி அலுவலர்களால் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்திருந்தாலும், மேற்கண்ட திருமண மண்டபத்தின் உரிமையாளருக்கு 25.01.2024–ஆம் தேதியிட்ட தாக்கீது அளிக்கப்பட்டு ஒரு வருடம் கழித்து தொடர் நடவடிக்கைக்காக 21.01.2025 மீண்டும் தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட திருமண மண்டப கட்டிடம் தொடர்பான தொடர் நடவடிக்கையினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998–ன்படியும், உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படியும் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்துமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள அனுமதிக்கு மாறாக உள்ள மேற்கண்ட திருமண மண்டபம் கட்டிடத்தின் மீது காலம் தாழ்த்தி நடவடிக்கை எடுத்த தாம்பரம் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்குமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.க.சுரேஷ் பாபு,
எண் 13 துரைராஜ் தெரு,
காந்தி நகர், நாகல் கேணி,
குரோம்பேட்டை,
சென்னை–600 044.

(2) உரிமையாளர்,
ஜமால் பேலஸ்–மினி திருமண மண்டபம்,
19, பழனியப்பன் தெரு, பம்மல்,
சென்னை–600 044.

(3) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).